# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்
## ஆண்டிறுதிப் பரீட்சை – 2011
### குடியுரிமைக் கல்வியும் மக்களாட்சியும்

தரம் : 10 நேரம் : 3 மணித்தியாலம்

பகுதி 1

**இலக்கம் 1 தொடக்கம் 12 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. சகல பிரஜைகளதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் ஆட்சி

   1). மன்னராட்சி 2). சர்வதிகார ஆட்சி 3). ஜனநாயக ஆட்சி 4). இராணுவ ஆட்சி

2. அரசியல் யாப்பு அல்லது சட்ட ஆக்கம் தொடர்பாக மக்களின் விருப்பை அறிவதற்கு நடைபெறும் வாக்கெடுப்பு

   1). திருப்பி அழைத்தல் 2). ஒப்பங்கோடல் 3). குடிமுனைப்பு 4). சர்வஜன வாக்கெடுப்பு

3. நிரல் A யினை நிரல் B யுடன் பொருத்தமான வகையுடன் இணைக்கும் போது கிடைக்கும் விடைத் தொகுதி

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1). ஆங்கிலப் புரட்சி | A. 1917 |
| 2). அமெரிக்கப் புரட்சி | B. 1789 |
| 3). பிரான்சியப் புரட்சி | C. 1688 |
| 4). ரஷ்யப் புரட்சி | D. 1776 |

   1). CDBA 2). BCDA 3). DABC 4). ACDB

4. கீழ்வருவனவற்றில் ஒருவரின் அரசியல் உரிமையாக கருதப்படுவது

   1). வாழ்வதற்கான உரிமை 2). விரும்பிய தொழில் புரியும் உரிமை
   3). வாக்களிப்பதற்கான உரிமை 4). சொத்துக்கள் சேர்க்கும் உரிமை

5. ஒற்றையாட்சியின் பண்புகள் அல்லாதது

   1). ஒரு மத்திய அரசாங்கம் மட்டும் இருத்தல்
   2). அனைத்து ஆட்சிக் கருமங்களும் மத்திய அரசு மூலம் செயற்படும்
   3). பல பிராந்திய அரசுகள் இருக்கும்
   4). அரசாங்கத்திற்கு சவால்விட பிரதேச அலகுகளினால் முடியாது.

6. பன்மைக் கலாச்சார சமூகத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் காரணி

   1). அரசியல் அமைப்பு 2). குடிப்பெயர்வு 3). இறைமை 4). தேர்தல்

7. ஒரு பொருளாதாரத்தின் முக்கிய நடவடிக்கைகளாவன

   1). உற்பத்தி, விநியோகம், நுகர்வு 2). உற்பத்தி, விளம்பரம், நுகர்வு
   3). விநியோகம், நுகர்வு, கண்காட்சி 4). நுகர்வு, விளம்பரம், உற்பத்தி

8. சமதர்மம் பொருளாதாரத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்று

   1). தனியார் சொத்துரிமை 2). இலாப நோக்கம் கொண்டது
   3). பொதுச் சொத்துரிமை 4). பொது, தனியார் முயற்சியாண்மை

9. மோதல்கள் ஏற்படுவதற்கான காரணிகள்

   1). மக்களின் அறியாமை 2). சீரான சமூகமயமாக்கம் இன்மை
   3). இயற்கையான ஆக்கிரமிப்புச் சுபாவம் 4). மேற்கூறிய யாவும்.

10. நாடுகளில் எல்லைப் பிரச்சினை தொடர்பாக அடிக்கடி மோதல்கள் ஏற்படும் நாடுகள்

   1). பிரித்தானியா, அயர்லாந்து 2). இஸ்ரேல், பலஸ்தீனம்
   3). அமெரிக்கா, கனடா 4). பிரான்ஸ், யப்பான்

11. சமஷ்டி ஆட்சியில் அதிகாரம் பகிரப்படும் முறையாவது
   1). நிர்வாக அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்.
   2). இறைமை அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்
   3). ஆட்சி அதிகாரங்கள் மத்தியில் குவிந்திருத்தல்
   4). அரசியல் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்

12. மாகாண ஆளுநரின் அதிகாரங்கள் அல்லாதன
   1). மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைக்குமிடையிலான இணைப்பு நடவடிக்கைகள்
   2). அரசாங்கத்தின் பிரதிநிதியாக செயற்படல்
   3). மாகாணசபை வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்
   4). மாகாண அமைச்சர்களை முதலமைச்சர் ஆலோசனையின்படி நியமித்தல்

**இலக்கம் 13 இலிருந்து 24 வரையுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் √ எனவும் பிழையாயின் X எனவும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.**

13. ஒப்பங்கோடல் அல்லது மக்கள் வாக்கெடுப்பு இலங்கையில் நடைமுறையில் காணப்படுகின்றது. (   )
14. கிரேக்கத்தில் நேரடி ஜனநாயக ஆட்சிமுறை காணப்பட்டது. (   )
15. ஒரு சட்டத்தை இயற்றும்படி மக்கள் அரசைக் கேட்கும் வழமை சுவிற்சர்லாந்தில் உள்ளது. (   )
16. ஜனநாயக நாடுகளில் ஒரு கட்சிஆட்சி முறையே காணப்படும், (   )
17. சட்டத்தின் இறைமை என்பது ஆள்வோர் ஆளப்படுவோர் அனைவருக்கும் எவ்வித பேதத்தையும் காட்டுவதில்லை. (   )
18. மாகாணசபை முறை 13வது அரசியல் திருத்தத்தின் ஊடாக இலங்கையில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது (   )
19. இலங்கை ஜனாதிபதியின் பதவிக் காலம் 5 ஆண்டுகளாகும். (   )
20. அதிகாரப் பகிர்வும் பரவலாக்கமும் ஒரே விதமான செயலொழுங்கு ஆகும். (   )
21. பன்மைச் சமூகம் ஒன்றில் பல இன, மத, மொழிகள் பேசும் மக்கள் கூட்டத்தினர் வாழ்வர். (   )
22. அரசாங்கம் ஒரு நிலையான நிறுவனமாகும். (   )
23. சந்தைப் பொருளாதார நாடுகளில் மத்திய திட்டமிடும் குழுவினரே பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளுவர் (   )
24. மோதல்களைத் தீர்ப்பதற்கு கலந்துரையாடலும் சிறந்த வழிமுறையாகும். (   )

**இலக்கம் 25 இலிலிருந்து 34 வரை உள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் சரியான விடையை தெரிவு செய்து வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

25. பண்டைக் காலத்தில் கிராம நிர்வாக தலைவன் ........................................................ என்ற பெயரால் அழைக்கப்பட்டான்.
   ( மன்னன், கமிக, குத்திகன் )
26. ஒரு கட்சி முறை நிலவும் நாடுகளில் ஒன்று ............................................... ஆகும்.
   ( சீனா, இலங்கை, பிரித்தானியா )
27. ................................................ பிரஜைகளின் சட்டரீதியான கடமைகளில் அடங்கும்.
   ( பெரியோரை மதித்தல், வரலாற்று சின்னங்களை பாதுகாத்தல், வரி செலுத்தல் )
28. சட்ட ஆக்கத்தில் இரு நிறுவனங்கள் செயற்படும் நாடு .........................................
   (இந்தியா, மாலைதீவு, வாங்காளதேசம் )
29. அரசின் தலைவராகவும், அரசாங்கத்தின் தலைவராகவும் செயற்படுபவர் ............................ ஆவார். ( ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் )
30. பொருளாதார முறைமையொன்றின் அடிப்படைக் குறிக்கோளாவது எதை, எவ்வாறு ........................................ உற்பத்தி செய்ய வேண்டும் என்பதாகும்.
   ( எவ் ஊழிய முறைகளுடன், யாருக்காக, எச் சந்தை சக்திகளுக்காக )

31. இடைநிலைப் பொருட்கள் எனும் வகுதிக்குள் வளமாக்கிகள், கனியவளம் ................................ என்பன அடங்குகின்றன.
(இயந்திர வகை, பருப்பு, இரசாயன பொருட்கள் )

32. எல்லை தகராறு ................................ என்பன அரசியல் மோதல்களுக்கு இட்டுச் செல்லும் காரணிகள் எனக் கூறமுடியும்.
(அதிகார விரிவாக்கம், வளங்களைப் பெற்றுக் கொள்ளல், சமயமுரண்பாடுகள் )

33. இலங்கையில் செயற்படும் மாகாண சபைகளின் எண்ணிக்கை .......... ஆகும். (8, 9, 25 )

34. மாகாண சபை அதிகாரத்திற்கு உட்படும் விடயம் ..........................................
( தேசிய போக்குவரத்து, வெளிநாட்டு தொடர்பு, கிராம அபிவிருத்தி )

**இலக்கம் 35இலிருந்து 40 வரையிலான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கூற்றுக்களில் பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்து இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

35. சந்தைப் பொருளாதாரமொன்றின் பண்புகளாவன
1). அரச முயற்சியாண்மைகளைத் தனியார் மயப்படுத்தல்
2). கேள்வி நிரம்பலுக்கேற்ப விலை தீர்மானிக்கப்படல்
3). பொருளாதாரத்தில் அரசு தலையிடல் ( )
4). தனியார் முதலீட்டை ஊக்குவித்தல்

36. ஜனநாயக ஆட்சி முறை பண்புகளுடன் தொடர்புபட்டது.
1). தேர்தல் மூலம் ஆட்சி 2). ஊடகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட தணிக்கை பின்பற்றல்
3). போட்டி கட்சி முறை 4). ஊடக சுதந்திரம் ( )

37. சட்டத்துறையின் கடமைகள்
1). சட்டங்களுக்கு விளக்கமளித்தல் 2). சட்டமியற்றல்
3). நிதிக் கட்டுப்பாடு 4). வரவு செலவுத் திட்டத்தைக் கட்டுப்படுத்தல் ( )

38. அரசியல் யாப்பில் இடம் பெறும் முக்கிய விடயங்களாவன
1). அரசின் பிரதான நிறுவனங்கள் உருவாக்கப்படும் விதம்
2). அரசுகளுக்கும், குடிமக்களுக்கும் இடையிலான தொடர்பு ( )
3). அரச உத்தியோகத்தர் நியமனம் 4). பிரஜைகளின் அடிப்படை உரிமை

39. அரசின் பிரதான பணிகள் ஆவன
1). குடும்பத் தகராறுகளை தீர்த்தல் 2). சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்
3). இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் ( )
4). சமூக நலன்புரி சேவைகள் வழங்குதல்

40. மாகாண சபை நிர்வாக கட்டமைப்பில் காணப்படுபவர்கள்
1). ஆளுனர் 2). நகரபிதா 3). அமைச்சர்கள் 4). முதலமைச்சர்கள் ( )

(40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்குமாக மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1). 1. ஜனநாயகம் பற்றி கூறிய இரு அறிஞர்களை குறிப்பிடுக.
2. அரசு ஒன்று நிலை பெறுவதற்கு அவசியமான காரணிகளில் இரண்டைக் குறிப்பிடுக.
3. உற்பத்திக் காரணிகள் இரண்டை எழுதுக.
4. எதனை, எவ்வளவு செய்தல் என்ற அடிப்படை பொருளாதார பிரச்சினையில் செல்வாக்கு செலுத்தும் இரு காரணிகளும் எவை?
5. ஜனாதிபதி ஆட்சிமுறை நிலவும் நாடுகள் இரண்டு தருக.
6. ஜனநாயக ஆட்சிமுறைக்கு எதிரான சவால்கள் இரண்டு குறிப்பிடுக.
7. சமஷ்டி ஆட்சிமுறையின் இரு பண்புகளை குறிப்பிடுக.
8. கிராமசேவகரின் பணிகளில் இரண்டைக் குறிப்பிடுக
9. முதன் முதலில் தேசிய அரசு தோற்றம் பெற்ற நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.
10. கலப்புப் பொருளாதாரத்தின் பண்புகள் இரண்டை எழுதுக. (10X2=20 புள்ளிகள்)

2). "ஜனநாயகம் என்பது ஒரு கட்சிமுறை மட்டுமன்றி ஒரு வாழ்க்கை முறையாகும்"
1. நேரடி ஜனநாயக உத்திகளில் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. பிரித்தானிய கலைக்களஞ்சியத்தில் கூறப்பட்டுள்ள ஜனநாயகத்தின் மாதிரிகளை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. ஜனநாயக ஆட்சியின் பண்புகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

3). "மகிழ்ச்சியாகவும் கௌரவமாகவும் வாழும் நோக்கில் மனிதன் ஒன்று சேர்ந்து அமைத்துக் கொண்ட ஒழுங்கமைப்பே அரசு"
1. தேசிய அரசுகளின் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளில் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. அரசாங்கத்தின் பிரதான பிரிவுகளைத் தருக. (3 புள்ளிகள்)
3. அரசுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிட்டு விளக்குக. ( 5 புள்ளிகள்)

4). "இலங்கை ஒரு பல்கலாசார நாடாகும்"
1. பல்கலாசார சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 தருக. (2 புள்ளிகள்)
2. பல் கலாசார சமூகத்தின் பிரதான பண்புகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. இலங்கை ஒரு பல்கலாசார நாடு என்பதற்கான காரணங்களை குறிப்பிட்டு விளக்குக.(5 புள்ளிகள்)

5). "நாடொன்றின் அபிவிருத்தியில் பொருளாதாரத்தைச் சரியாக முகாமை செய்தல் அத்தியாவசியமானதாகும்."
1. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் பண்புகள் 2 தருக. (2 புள்ளிகள்)
2. முதலீட்டுப் பொருட்கள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. சந்தைப் பொருளாதார இயல்புகள் 2ஐக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

6). 1. முரண்பாடுகள் ஏற்படுவதற்கான காரணிகள் 2 எழுதுக. (2 புள்ளிகள்)
2. ........................... தீர்வுக்கான வழிமுறைகள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. ஒரு நடுநிலையாளர் கொண்டிருக்க வேண்டிய குணவியல்புகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

*May*

### ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை



**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**